# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# எட்டாம் பத்து

## மூன்றாம் திருவாய்மொழி - அங்கும் இங்கும்
## ஆழ்வார் இவ்விபூதியில் எம்பெருமானுக்குப் பரிவர் இல்லாமை பற்றி அஞ்சி, அப்பிரான் அருளால் எங்கும் பரிவர் உளர் என்று உணர்ந்து பயம் தீர்தல்

** அங்கும் இங்கும் * வானவர் தானவர் யாவரும் *
எங்கும் இனையை என்று உன்னை * அறிய கிலாது அலற்றி **
அங்கம் சேரும் * பூ மகள் மண் மகள் ஆய் மகள் *
சங்கு சக்கரக் கையவன் என்பர் * சரணமே 1

சரணம் ஆகிய * நான்மறை நூல்களும் சாராதே *
மரணம் தோற்றம் * வான் பிணி மூப்பு என்று இவை மாய்த்தோம் **
கரணப் பல் படை * பற்று அற ஓடும் கனல் ஆழி *
அரணத் திண் படை ஏந்திய * ஈசற்கு ஆளாயே 2

ஆளும் ஆளார் * ஆழியும் சங்கும் சுமப்பார் தாம் *
வாளும் வில்லும் கொண்டு * பின் செல்வார் மற்று இல்லை **
தாளும் தோளும் * கைகளை ஆரத் தொழக் காணேன் *
நாளும் நாளும் நாடுவன் * அடியேன் ஞாலத்தே 3

ஞாலம் போனகம் பற்றி * ஓர் முற்றா உரு ஆகி *
ஆல் அம்பேர் இலை * அன்னவசம் செய்யும் அம்மானே! **
காலம் பேர்வதோர் * கார் இருள் ஊழி ஒத்து உளதால் * உன்
கோலம் கார் எழில் * காணல் உற்று ஆழும் கொடியேற்கே 4

கொடி ஆர் மாடக் * கோளூர் அகத்தும் புளிங்குடியும் *
மடியாது இன்னே * நீ துயில் மேவி மகிழ்ந்தது தான் **
அடியார் அல்லல் தவிர்த்த அசவோ? * அன்றேல் இப்
படி தான் * நீண்டு தாவிய அசவோ? * பணியாயே 5

பணியா அமரர் * பணிவும் பண்பும் தாமேயாம் *
அணியார் ஆழியும் * சங்கமும் ஏந்துமவர் காண்மின் **
தணியா வெந்நோய் * உலகில் தவிர்ப்பான் * திரு நீல
மணியார் மேனியோடு * என் மனம் சூழ வருவாரே 6

வருவார் செல்வார் * வண் பரிசாரத்து இருந்த * என்
திரு வாழ் மார்வற்கு * என் திறம் சொல்லார் செய்வதென்? **
உருவார் சக்கரம் * சங்கு சுமந்து இங்கு உம்மோடு *
ஒரு பாடு உழல்வான் * ஓர் அடி யானும் உளன் என்றே 7

என்றே என்னை * உன் ஏரார் கோலத் திருந்து அடிக் கீழ் *
நின்றே ஆட்செய்ய * நீ கொண்டருள நினைப்பது தான்? **
குன்றேழ் பாரேழ் * சூழ் கடல் ஞாலம் முழு ஏழும் *
நின்றே தாவிய * நீள் கழல் ஆழித் திருமாலே! 8

திருமால்! நான்முகன் * செஞ்சடையான் என்றிவர்கள் * எம்
பெருமான் தன்மையை * யார் அறிகிற்பார்? பேசி என்? **
ஒரு மா முதல்வா! * ஊழிப் பிரான்! என்னை ஆளுடை *
கரு மா மேனியன் என்பன் * என் காதல் கலக்கவே 9

கலக்கம் இல்லா * நல் தவ முனிவர் கரை கண்டோர் *
துளக்கம் இல்லா * வானவர் எல்லாம் தொழுவார்கள் **
மலக்கம் எய்த * மா கடல் தன்னைக் கடைந்தானை *
உலக்க நாம் புகழ் கிற்பது * என் செய்வது? உரையீரே 10

** உரையா வெந்நோய் தவிர * அருள் நீள் முடியானை *
வரை ஆர் மாட * மன்னு குருகூர்ச் சடகோபன் **
உரை ஏய் சொல் தொடை * ஓர் ஆயிரத்துள் இப்பத்தும் *
நிரையே வல்லார் * நீடுலகத்துப் பிறவாரே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---